விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்

PRGI NO: TNBIL/25/A3556

DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 18 | செவ்வாய்க்கிழமை Tuesday | 18.11.2025 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

### பிரதமர் மோடி, முதலமைச்சர் ஸ்டாலின் மற்றும் தலைவர்கள் இரங்கல்

# 45 பேர் பலியான சவுதி பஸ் விபத்தில் உயிர்தப்பிய ஒற்றை இந்தியர்



மதீனா: சவுதி அரேபியாவில் பஸ்–டீசல் டேங்கர் லாரி மோதி 45 பேர் பலியான விபத்தில் ஒரேயொருவர் மட்டும் உயிர்தப்பி உள்ள விவரம் வெளியாகி இருக்கிறது.

சவுதி அரேபியாவில் முக்கிய இஸ்லாமிய நகரம் மதீனா. மெக்காவுக்கு அடுத்ததாக இஸ்லாமியர்களுக்கு புனித நகரமாக கருதப்படும் மதீனாவுக்கு அருகே பஸ் ஒன்றில் பலர் உம்ரா புனித பயணம் சென்று கொண்டிருந்தனர். பஸ்சில் இருந்தவர்கள் பெரும்பாலும் ஹைதராபாத்தைச் சேர்ந்தவர்கள்.

மதீனாவுக்கு 160 கிமீ தொலைவில் முப்ரிபாத் என்ற இடத்தில் டீசல் டேங்கர் லாரி மீது பஸ் மோதி விபத்துக்குள்ளானது. இதில் பஸ்சில் இருந்து 20 பெண்கள், 11 குழந்தைகள் உள்பட 45 பேர் உயிரிழந்தனர்.

மீட்புக்குழுவினர் சம்பவ பகுதிக்குச் சென்று மீட்புப்பணிகளில் இறங்கினர். அப்போது பஸ்சில் பயணித்தவர்களில் ஒருவரை தவிர, எஞ்சிய அனைவரும் உயிரிழந்தது தெரிய வந்தது. படுகாயம் அடைந்து உயிருக்கு போராடியவரை மீட்ட மீட்புக்குழுவினர் அவரை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். தற்போது அவர் யார், பெயர் உள்ளிட்ட விவரங்கள் வெளியாகி உள்ளது. அவரின் பெயர் முகமது அப்துல் சோயிப். 24 வயது வாலிபரான அவர், ஹைதராபாத்தைச் சேர்ந்தவர். விபத்தின் போது பஸ் டிரைவர் அருகில் இருந்து உட்கார்ந்து பயணித்து இருக்கிறார்.

முகமது அப்துல் சோயிப் தற்போது சவுதி அரேபியாவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். அவரின் உடல்நலம் இப்போது எப்படி உள்ளது என்பது பற்றிய எந்த தகவல்களும் இதுவரை வெளியாகவில்லை.

இதனிடையே விபத்தில் பலியானவர்களின் உறவினர்கள் சவுதி பயணம் செய்ய ஏதுவாக தெலுங்கானா அரசாங்கம் துரித நடவடிக்கைகளை .

அவர்களின் பாஸ்போர்ட்டுகளை விரைவில் வினியோகிக்கவும், தேவையான அவசர உதவிகளை செய்து தரவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு உள்ளது.

சவுதி அரேபியாவில் பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளனர். சவுதி அரேபியாவின் மதீனா அருகே பேருந்து – டீசல் லாரி மோதி விபத்துக்குள்ளானது. மெக்காவில் இருந்து மதீனாவிற்கு உம்ரா புனிதபயணிகள் சென்ற போது விபத்து நிகழ்ந்துள்ளது. இந்த கோர விபத்தில் பேருந்து தீப்பற்றியது. இதில் பேருந்தில் பயணித்த இந்தியர்கள் 42 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். இதில், ஐதராபாத்தை சேர்ந்த 20 பெண்கள், 11 குழந்தைகள் என்பது தெரியவந்துள்ளது. மற்ற உடல்களை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது.

இந்த நிலையில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், "மதீனாவில் இந்தியர்கள் விபத்தில் சிக்கியதால் மிகுந்த வருத்தம் அடைந்தேன். தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த குடும்பத்தினருடன் என் எண்ணங்கள் உள்ளன. காயமடைந்த அனைவரும் விரைவில் குணமடைய பிரா ர்த்திக்கிறேன். ரியாத்தில் உள்ள



எங்கள் தூதரகம் மற்றும் ஜெட்டாவில் உள்ள துணைத் தூதரகம் அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்றன. எங்கள் அதிகாரிகள் சவுதி அரேபிய அதிகாரிகளுடனும் நெருங்கிய தொடர்பில் உள்ளனர்". இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே போல், முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில், " மதீனா அருகே நடந்த துயரமான பேருந்து விபத்தில் பல இந்திய யாத்ரீகர்கள் உயிரிழந்த சம்பவம் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த துயரமான நேரத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் முழு மருத்துவ சிகிச்சை பெற்று விரைவில் குணமடைவர் என்று நம்புகிறேன்," என கூறியுள்ளார்.

# முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை

## பாரபட்சமானது; அரசியல் உள்நோக்கம் கொண்டது என கண்டனம்



டாக்கா: தனக்கு மரண தண்டனை விதித்து வங்கதேசத்தின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் அளித்துள்ள தீர்ப்பு பாரபட்சமானது என்றும் அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றும் அந்நாட்டின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.

வங்கதேசத்தில் கடந்த ஆண்டு மாணவர்கள் தலைமையிலான போராட்டங்களை ஒடுக்கியபோது ஏற்பட்ட வன்முறை மற்றும் உயிரிழப்பு குற்றங்களுக்காக வங்கதேசத்தின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு அந்நாட்டின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் மரண தண்டனை விதித்துள்ளது. இந்த தீர்ப்பு குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஷேக் ஹசீனா, "ஜனநாயகப்பூர்வமாக தேர்ந்தெடுக்கப்படாத ஒரு அரசாங்கத்தால் நிறுவப்பட்ட ஒரு மோசடி தீர்ப்பாயம் எனக்கு எதிராக தீர்ப்பளித்துள்ளது. அவர்கள் பாரபட்சத்துடனும் அரசியல் உள்நோக்கத்துடனும் உள்ளனர். மரண தண்டனை விதித்திருப்பதன் மூலம், வங்கதேச மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதமரை நீக்கவும், அவாமி லீக் கட்சியை இல்லாது ஒழிக்கவும் இடைக்கால அரசில் இருக்கும் தீவிரவாத நபர்கள், வெட்கக்கேடான, கொலைகார நோக்கத்தை வெளிப்படுத்தி உள்ளார்கள்.

டாக்டர் முகமது யூனுசின் குழப்பமான, வன்முறை நிறைந்த, பிற்போக்குத்தனமான நிர்வாகத்தால், லட்சக்கணக்கான வங்கதேச மக்களை முட்டாளாக்க முடியாது, அவர்களின் ஜனநாயக உரிமையை பறிக்க முடியாது. நீதியை வழங்குவதையோ, ஜூலை–ஆகஸ்ட் 2025–ல் என்ன நிகழ்ந்தது என்பது குறித்த உண்மையை வெளிப்படுத்துவதையோ இவர்கள் கூறும் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்பதை அவர்கள் அறிவார்கள். அவாமி லீக்கை அழித்தொழிப்பதும், முகமது யூனுஸ் மற்றும் அவரது அமைச்சர்களின் தோல்விகளில் இருந்து உலகின் கவனத்தை திசை திருப்புவதுமே அவர்களின் நோக்கமாக இருந்தது.

முகமது யூனுசின் தலைமையின் கீழ் பொது சேவைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. குற்றங்கள் நிறைந்த தெருக்களில் இருந்து போலீஸார் பின்வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது, நீதித்துறையில் நியாயம் சீர்குலைக்கப்பட்டுள்ளது, அவாமி லீக் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் தண்டிக்கப்படவில்லை. இந்துக்களும் பிற சிறுபான்மையினரும் தாக்கப்படுகிறார்கள், பெண்களின் உரிமைகள் நசுக்கப்படுகின்றன. ஹிஸ்புத்–உத்–தஹ்ரிர் பிரமுகர்கள் உட்பட இஸ்லாமிய தீவிரவாதிகள், வங்கதேசத்தின் மதச்சார்பின்மை மரபை சீர்குலைக்க முயல்கிறார்கள்.

பத்திரிகையாளர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டு அச்சுறுத்தப்படுகிறார்கள், பொருளாதார வளர்ச்சி ஸ்தம்பித்துள்ளது. முகமது யூனுஸ் தேர்தல்களை தாமதப்படுத்துகிறார், நாட்டின் நீண்ட கால கட்சியான அவாமி லீக்கை தேர்தல்களில் பங்கேற்கததடை விதித்துள்ளார்.

சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தில் என் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நான் முற்றிலுமாக மறுக்கிறேன். கடந்த ஆண்டு ஜூலை–ஆகஸ்ட் மாதங்களில் நிகழ்ந்த அரசியல் பிளவால் இரு தரப்பிலும் நிகழ்ந்த மரணங்களுக்கு நான் இரங்கல் தெரிவிக்கிறேன். ஆனால், நானோ பிற அரசியல் தலைவர்களோ போராட்டக்காரர்களைக் கொல்ல உத்தரவிடவில்லை." என தெரிவித்துள்ளார்.

# நவ.22ல் மேலும் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு: இந்திய வானிலை ஆய்வு மையம்



சென்னை: நவ.22 ஆம் தேதி வங்கக் கடலில் மேலும் ஒரு புதிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் இலங்கை கடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்–மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி நிலவுகிறது. இது மேற்கு–வடமேற்கு திசையில் மெதுவாக நகர்ந்து செல்லும் என சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இதன் காரணமாக இன்று கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும் உள் தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களில் நவம்பர் 21,22 ஆம் தேதிகளில் கன மழை முதல் மிக கனமழை பெய்யும். நவ.22 ஆம் தேதி வங்கக்கடலில் மேலும் ஒரு புதிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது. இது மேற்கு–வடகிழக்கு நோக்கி நகர்ந்து அடுத்த 48 மணி நேரத்தில் மேலும் வலுப்பெற வாய்ப்பு உள்ளது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: 'தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை கடலோர பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி நிலவுகிறது. இது நாளை (நவ.18) மேற்கு அல்லது வடமேற்கு திசையில் மெதுவாக நகரக்கூடும். மேலும் நவ.22–ம் தேதி வாக்கில் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது, அடுத்த 48 மணி நேரத்தில் மேற்கு அல்லது வடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுப்பெறக்கூடும்.

தமிழகத்தில் நாளை பெரும்பாலான இடங்களிலும், நவ.19 முதல் 23–ம் தேதி வரை ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் நாளை கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தென்காசி மற்றும் தேனி மாவட்டங்களிலும் 19, 20 தேதிகளில் மயிலாடுதுறை மற்றும் கடலூர் மாவட்டங்களிலும், 21–ம் தேதி மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, நாகப்பட்டினம் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. 22–ம் தேதி திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும், 23–ம் தேதி மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் சிவகங்கை, அரியலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் கனமழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிமீ வேகத்திலும் இடையிடையே 55 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

### சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் பிறந்தநாளை முன்னிட்டு

# கோவையில் நடைபெற்ற விழாவில் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டது

காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் பிறந்தநாள் விழா கோவையில் நடைபெற்றது..



இளைஞர் காங்கிரஸ் தேசிய ஒருங்கிணைப்பாளர் ஹரிஹரசுதன் தலைமையில் நடைபெற்ற இதில், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் முன்னால் சட்டமன்ற உறுப்பினரும் ஆன எம்.என்.கந்தசாமி,காங்கிரஸ் மாவட்ட தலைவர்கள் விஜயகுமார், ரங்கராஜ் காங்கிரஸ் சிறுபான்மை துறை மாநில தலைவர் முகம்மது ஆரீ:ப் மற்றும் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.. சர்வ மத பிரார்த்தனையாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் முன்னதாக ரேஸ்கோர்ஸ் பகுதியில் உள்ள சாரதாம்பாள் கோவிலில் சிறப்பு பூஜை நடைபெற்றது. தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது..

விழாவில் ஒரு பகுதியாக நலிவுற்ற இரண்டு ஏழை குடும்ப பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டது..

### அரசியலுக்காக எஸ் ஐ ஆர் ஐ எதிர்க்கவில்லை என்றும்

# தவெக வினர் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் படிவங்கள் வழங்கப்படவில்லை

## கொள்கை பரப்பு பொதுச்செயலாளர் அருண்ராஜ் தகவல்

தமிழகத்தில் நடைபெற்று வரும் எஸ் ஐ ஆர் எனும் வாக்காளர் பட்டியல் தீவிர சுருக்க முறை திருத்தத்திற்கு எதிராக தமிழக வெற்றி கழகம் சார்பில் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதன் ஒரு பகுதியாக கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக த.வெ.க, கட்சியின் கொள்கை பரப்பு மாநில பொதுச் செயலாளர் அருண்ராஜ் தலைமையில் 500க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது எஸ் ஐ ஆர் திட்டத்திற்கு எதிராகவும் எஸ் ஐ ஆர் திட்டத்தில் உள்ள குளறுபடிகளை முன்னிறுத்தி கோஷங்களும் எழுப்பப்பட்டது.



ஆர்ப்பாடத்தை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அருண்ராஜ்,மாநில அளவில்

எஸ் ஐ ஆர் க்கு எதிரான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், எஸ் ஐ ஆர் என்பது கண்டிப்பாக அவசியம் என்றாலும் தேர்தல் நேரத்தில் ஏன் இதனை அவசரமாக செய்ய வேண்டும் எனவும் கேள்வி எழுப்பினார்.இதைத் தவறில்லாமல்செய்யவேண்டும் எனவும் தமிழகத்தில் 6.4 கோடி வாக்காளர்கள் இருக்கின்ற நிலையில் பி எல் லோக்கள் எப்படி மூன்று முறை நேரில் சென்று அவர்கள் பகுதியை பார்க்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.அரசுப்பணி வேலையை பார்த்துவிட்டு blo வேலையையும் எப்படி ஊழியர்களால் பார்க்க முடியும் எனவும்

Blo பற்றி பெரிய புரிதல் இல்லாமல் தான் இருக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

தவெக ஆதரவாளர்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் வாக்காளர் படிவங்கள் கொடுக்கப்படவில்லை.

இதை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல இருக்கின்றோம் எனவும் குறிப்பிட்டார்.மேலும் நியாயமான சந்தேகங்களை தேர்தல் ஆணையம் தீர்க்கவில்லை என்றும்

இவ்வளவு அவசரமாக ஏன் செய்ய வேண்டும் பொறுமையாக அடுத்த ஆண்டு செய்யலாமே எனவும் கூறிய அவர்,இந்த வாக்காளர் பட்டியலை வைத்து கடந்த ஆண்டு தேர்தல் நடைபெற்ற நிலையில் அந்த தேர்தல் சரியாக நடக்கவில்லையா எனவும் கேள்வி எழுப்பினார்.

பீகாரில் 68 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டு பின்னர் சிலரை சேர்த்திருப்பதாகவும் ஆட்சி மாற்றத்துக்கு

அதுவும் ஒரு காரணமாக இருக்கிறது என்றும் தேர்தலுக்கு முன்பு பல திட்டங்கள் அறிவித்ததால் அங்கு பெண்கள் வாக்கு சதவீதம் அதிகரித்துள்ளது எனவும் தெரிவித்தார்.பி எல் ஓ பின்னால் திமுகவினர் செல்கின்றனர்.ஆனால் தவெக கட்சிக்காரர்கள் சென்றால் அவர்களை அனுமதிப்பது இல்லை என்றும் பீகாரில் எஸ் ஐ ஆர் அறிவித்த பொழுதே தமிழக வெற்றி கழகம் முதலில் எதிர்ப்பு தெரிவித்தது என்றும் கொள்கை ரீதியாக நாங்கள் எஸ் ஐ ஆரை எதிர்க்கிறோம் என்றும் கூறினார்.இதேபோல் தமிழக வெற்றி கழகம் இந்த முறை தான் போட்டியிடுவதால்

கொங்கு மண்டலம் யாருடைய கோட்டை என்பது இனிமேல் தான் தெரியும் என குறிப்பிட்ட அவர்,தமிழக வெற்றிக் கழகத்தின் ஆதரவு எப்படி இருக்கின்றது என்பதை தற்போதே பார்த்திருப்பீர்கள். வரும் தேர்தலில் அமோக வெற்றி பெறும் கூட்டணி இருக்குமா என்பதை தலைவர் தக்க நேரத்தில் முடிவு செய்வார் என்றும் தெரிவித்தார்.மேலும் முதல் மாநாட்டில் சொன்ன நிலைப்பாட்டை போன்று

பாஜகவை தவிர்த்து கூட்டணியில் மற்ற கட்சிகள் வந்தால் ஏற்றுக் கொள்வோம் எனவும் தமிழ்நாடு வேறு மற்ற மாநிலங்கள் வேறு எனவும் இங்கு தலைவருக்கு கரிஷ்மா வேண்டும். மக்கள் ஆதரவு பெற்ற ஒரு தலைவர் இருக்க வேண்டும்.அப்படிப்பட்ட தலைவர் தமிழக வெற்றி கழகத்தில் மட்டும்தான் இருக்கிறார் எனவும்

அனைத்து மக்களுக்கும் அன்பு காட்டக்கூடிய தலைவராக தமிழக வெற்றிக் கழகம் தலைவர் மட்டுமே இருக்கிறார் எனவும் உறுதிபட தெரிவித்தார்.

எஸ்ஐஆரை அரசியலுக்காக எதிர்க்கவில்லை ஆனால் படிவங்கள் கொடுக்கும் பொழுது தமிழக வெற்றி கழகத்தை சார்ந்தவர்களுக்கு விண்ணப்பங்கள் கொடுக்கவில்லை என்றும் பல இடங்களில் இந்த புகார் வந்துள்ளது தமிழக வெற்றிக்கழக வாக்காளர்களுக்கு வாக்குரிமை கிடைக்காமல் தடுக்கும் திட்டமும் இருக்கிறது என்றும் குற்றம் சாட்டிய அருண்ராஜ்,

ஒரு வாக்காளர் கூட நீக்கப்படக்கூடாது என்றும் தவெக சார்பில் அனைத்து பூத்துகளுக்கும் ஆட்கள் போடப்பட்டு அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.



# திருமங்கலம் தொகுதியில் வாக்காளர்கள் சிறப்பு சீர்திருத்த பணிகளை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார்

## இதில் பாஜக கட்சியில் இருந்து விலகிய 50க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் அமைச்சர் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்

மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடி,கல்லுப்பட்டி பேரையூர் ஆகிய பகுதிகளில் தேர்தல் ஆணையத்தால் கொண்டுவரப்பட்டுள்ள எஸ் ஐ ஆர் வாக்காளர் சிறப்பு சீர்திருத்தம் பணிகள் மற்றும் பொதுமக்களிடையே எஸ் ஐ ஆர் குறித்து விழிப்புணர்வு முகாம் மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.இதில்தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு பொதுமக்களிடம் எஸ் ஐ ஆர் குறித்து எடுத்துக் கூறி அரசு அதிகாரியிடம் விவரங்களை கேட்டறிந்தார். இதில் தெற்கு மாவட்ட செயலாளரும் மணிமாறன் மற்றும் ஏராளமான திமுக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

முன்னதாக திருமங்கலம் கள்ளிக்குடியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் விமல் ஏற்பாட்டில் 50க்கும் மேற்பட்ட பாஜகவினர் திமுகவில் இணைந்தனர். இதில் பாஜக பொருளாதாரபிரிவு மாவட்ட செயலாளர் ராஜசேகர் விளையாட்டு துறை மாவட்ட செயலாளர் ராஜசேகர் உள்ளிட்டோர் பாஜக கட்சியில் இருந்து விலகி அமைச்சர் தங்கம் தென்னரசு முன்னிலையில் திமுகவில் இணைந்தனர் அவர்களுக்கு அமைச்சர் கட்சி துண்டு அணிவித்து வரவேற்றார். கட்சியில் இணைந்தவுடன் நிர்வாகிகள் காரில் இருந்த பாஜக கொடியை தூக்கி எறிந்து விட்டு திமுக கொடியை மாற்றினார்.

# யுனைடெட் பப்ளிக் பள்ளியில் 46 வது கோயம்புத்தூர் சகோதயா பள்ளிக்களுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டிகள்

## ஸ்ரீஇராமகிருஷ்ணா சென்ட்ரல் பள்ளி சாம்பியன் பட்டம் வென்றது

கோவை பெரியநாயக்கன்பாளையம் யுனைடெட் பப்ளிக் பள்ளியில் 2025 – 2026 ம் ஆண்டிற்கான 19 வயதிற்குட்பட்ட சி பி எஸ் சி பள்ளி மாணவர்களுக்கான, 46 வது கோயம்புத்தூர் சகோதயா பள்ளிக்களுக்கு இடையேயானகிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றது. 20 அணிகள் பங்கேற்ற இப்போட்டியில் ஸ்ரீ இராமகிருஷ்ணா சென்ட்ரல் பள்ளி வெற்றி பெற்று பரிசுக் கோப்பையை வென்றது.



2025–2026ம் ஆண்டிற்கான 19 வயதிற்குட்பட்ட சி பி எஸ் சி பள்ளி மாணவர்களுக்கு இடையேயான, கோயம்புத்தூர் 46 வது சகோதயா பள்ளிகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டிகள் பெரியநாயக்கன்பாளையம் தி யுனைடெட் பப்ளிக் பள்ளியில் நடைபெற்றது.

ஐந்து நாட்கள் நடைபெற்ற இந்த போட்டியில் 20 அணிகள் பதிவு செய்தன. போட்டிகளை யுனைடெட் கல்வி நிறுவனங்களின் நிறுவனர் மற்றும் தலைவர் பொறியாளர் சண்முகம் வீரர்களுக்கு அறிவுரைகள் வழங்கியும் கை குழுக்கி வாழ்த்து தெரிவித்தும், டாஸ்போட்டும்தொடங்கி வைத்தார்.

முதல் நாளில் 3 போட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில் மேட்டுப்பாளையம் எஸ் எஸ் விஎம்பள்ளியும்,இரண்டாம் போட்டியில் ஸ்ரீவிநாயகாவித்யாலயாபள்ளியும், மூன்றாம் போட்டியில் ரீட்ஸ் உலகப் பள்ளியும் வெற்றி பெற்றன. இரண்டாம் நாள் நடைபெற்ற4போட்டிகளில் முதல் போட்டியில் ஸ்ரீஅம்பாள் பப்ளிக் பள்ளியும், இரண்டாம் போட்டியில் ஸ்ரீராமகிருஷ்ணா பள்ளியும், மூன்றாம் போட்டியில் இராமச்சந்திரா இண்டர்நேஷனல் பள்ளியும், நான்காம் போட்டியில் சி எஸ் அகாடமி பள்ளியும் வெற்றிப் பெற்றன.

மூன்றாம் நாள் நடைபெற்ற 4 போட்டிகளில் முதல் போட்டியில் தி யுனைடெட் பப்ளிக் பள்ளியும், இரண்டாம் போட்டியில் அகரம் பப்ளிக் பள்ளியும்,மூன்றாம் போட்டியில் வேலம்மாள் போதி கேம்பஸ் பள்ளியும், நான்காம் போட்டியில் ரீட்ஸ் உலகப் பள்ளியும் வெற்றிப் பெற்றன.

நான்காம் நாள் 4 காலிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில் ஸ்ரீஅம்பாள் பப்ளிக் பள்ளியும், இரண்டாம் போட்டியில் ஸ்ரீராமகிருஷ்ணா பள்ளியும், மூன்றாம் போட்டியில் அகரம் பப்ளிக் பள்ளியும், நான்காம் போட்டியில்சிஎஸ்அகாடமி பள்ளியும் வெற்றிப் பெற்றன.

ஐந்தாம் நாள் இரண்டு அரையிறுதி போட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில்சிஎஸ்அகாடமி பள்ளியும், இரண்டாம் போட்டியில் ஸ்ரீராமகிருஷ்ணா பள்ளியும் வெற்றிப் பெற்றன.

இறுதிப் போட்டியில் ஸ்ரீ இராமகிருஷ்ணா சென்ட்ரல் பள்ளி வெற்றி வாகை சூடி, சகோதயா கிரிக்கெட் விளையாட்டு போட்டியில்சுழல்கோப்பையை வென்று முதலிடம் பெற்றது. இரண்டாம் இடத்தை ஈரோடு சி எஸ் அகாடமி பள்ளியும், மூன்றாமிடத்தை அகரம் பப்ளிக் பள்ளியும், நான்காமிடத்தை ஸ்ரீஅம்பாள் பப்ளிக் பள்ளியும் பெற்றன.

தொடர்ந்து நடைபெற்ற நிறைவு விழாவில் தி யுனைடெட் பப்ளிக் பள்ளியின்முதல்வர்முனைவர் ஹரிணி வெற்றி பெற்றஅணிவீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்து வரவேற்புரை வழங்கினார். துணைமுதல்வர்அனிதா தேவப்பிரியா நடைபெற்றுமுடிந்தஅனைத்து போட்டிகளின் முடிவுகளை அறிவித்தார். நிர்வாக இயக்குநர் முனைவர் பி சிவக்குமார் வாழ்த்துரை வழங்கினார்.

வெற்றிப்பெற்றபள்ளிகளுக்கு தி யுனைடெட் கல்வி நிறுவனங்களின் நிறுவனர்மற்றும்தலைவர் பொறியாளர் சண்முகம், நிர்வாக இயக்குநர் முனைவர் பி சிவக்குமார், தி யுனைடெட் பப்ளிக் பள்ளியின் முதல்வர் முனைவர் ஹரிணி, துணை முதல்வர் அனிதா தேவப்பிரியா ஆகியோர் மெடல்கள், சான்றிதழ்கள் மற்றும் கோப்பைகளை வழங்கினர். மேலும் போட்டிகளுக்கு நடுவர்களாகபணியாற்றியவர்களுக்கும், போட்டிகள் நடைபெற உறுதுணையாக இருந்த யுனைடெட் பப்ளிக்பள்ளிஉடற்கல்வி ஆசிரியர்கள் பூபதி, நரேஷ் மற்றும் யுனைடெட் கல்வி நிறுவனங்களின் உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டது.

வரி விளம்பரங்கள்

தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☏ +919444082959

# தென்காசி மாவட்ட மைய நூலகம் (ம) எழில் முகில் அமிஷோ நிறுவனம் இணைந்து நடத்திய குழந்தைகள் தின விழா

தென்காசி மாவட்ட மைய நூலகம், எழில் முகில் அமிசோ ஃபேமிலி ஸ்டோர் இணைந்து நடத்தும்



ஓவியப்போட்டி ஶ்ரீ பொன்னம்பலம் நடுநிலைப் பள்ளியில் குழந்தைகள் தின விழாவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு பள்ளியின் நிர்வாகி தேவி அவர்கள் தலைமை ஏற்க தலைமையாசிரியர்மு.சண்முகக்குமார்வரவேற்புரை செய்தார். சிறப்பு விருந்தினர்களாக தலைமை நூலகர் ராமகிருஷ்ணன்,எழில் முகில் அமிசோ ஃபேமிலி ஸ்டோர் நிறுவனர் திரு இளமுருகன், மாவட்ட நூலகர் (ஓய்வு) முனியப்பன், சுந்தர் கலந்து கொண்டு 1 முதல் 8 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கினார்கள். ஆசிரியை ரா,சிவசங்கரி அவர்கள் நன்றியுரை கூறினார்கள். விழா ஏற்பாட்டினை ஆசிரியர்கள் அந்தோணி, கிறிஸ்டின் ராஜ் , செல்வன் ,ராஜலட்சுமி சிவசக்தி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# பவள விழா கண்ட ரத்னாபள்ளி மாணவ மாணவிகள் கின்னஸ் சாதனை...

## பெற்றோர்கள் ஆசிரியர்கள் வாழ்த்து

மாபெரும்கிரகாம்பெல்உலகசாதனை2025நிகழ்ச்சி இலட்சியம் யோகா மற்றும் ஸ்கேட்டிங் அசோசியானால் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சி திரு .ஸ்ரீதர் பொறுப்பாசிரியர் கிரகாம்பெல் வேர்ல்ட் ரிக்கார்டு மற்றும் திரு .மாரிச்செல்வம் பதிப்பாசிரியர்



கிரகாம்பெல் வேல்ட் ரிக்கார்டு மற்றும் டாக்டர் ஜெய கிருஷ்ணன் ,டாக்டர் ஜெகன் ஆகியோர் முன்னிலையில் தென்காசி மத்தளம் பாறை அடுத்து அமைந்துள்ள கடையம் செல்லும் வழியில் தோரணமலையில் நடைபெற்றது . இவ்விழாவில் 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டார்கள் . இந்த உலக சாதனை நிகழ்வு தோரணமலைமுதல்படிதொடங்கிமலைமேலஉள்ள முருகன் கோவில் வரை உள்ள 1193படிகளையும் ஸ்கேட்டிங் அணிந்து 45நிமிடம் 20 வினாடிகளில் ஏறிச்சென்று கிரகாம்பெல் உலக சாதனை செய்தார்கள் .இதில் இரத்னா ஆங்கிலப்பள்ளி மாணவர்கள் சிவபாலஈஸ்வர் UKG,நான்காம் வகுப்பு மாணவர்கள்சிவஹரன்மோகித்கிருஷ்ணாராம்சரண் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் மாதேஷ் ,சிவருத்ரன் ஆகியோர் இந்த மாபெரும் கிராகம்பெல் உலக சாதனை 2025யில் வெற்றி பெற்றார்கள் . மேலும் இரண்டாம் வகுப்பு கிரிஷாந்த் ,சுதீஷ் துரை மூன்றாம் வகுப்பு வருண் ,நான்காம் வகுப்புபவித்ரன் ,ஹர்ஷன் ஐந்தாம் வகுப்புகார் முகிலன் ஆகியோர் ஸ்கேட்டிங் போட்டியில் கலந்து கொண்டு முதலிடம் பெற்று வந்தனர் .வெற்றிவாகை சூடிய மாணவர்களுக்கு முதன்மை சார்பு நீதிமன்ற நீதிபதி திரு .சுடலைமாடன் மற்றும் திரு .மயோபதி ராமசாமி ஆகியோர் பரிசும், உலக சாதனை சான்றிதழ்கள் மற்றும் பாராட்டும் வழங்கினார்கள் .

இந்நிகழ்வில் உலக சாதனை புதிய பெரும் உறுதுணையாக இந்த ஸ்கேட்டிங் பயிற்சியாளர் திரு.. பாலகணேஷ் மற்றும் மாணவர்களை பள்ளி நிர்வாகி இரத்னா பிரகாஷ் மற்றும் பெற்றோர் – ஆசிரியர் சங்கம் சார்பில் மனதார வாழ்த்தினார்கள் .

# நந்தா பிஸியோதெரபி மருத்துவ கல்லூரியில் "எழுச்சி 2025" சிறப்பு மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான விளையாட்டு போட்டி மற்றும் கலை நிகழ்ச்சிகள்



நந்தா பிசியோதெரபி மருத்துவ கல்லூரியின் சார்பில் சிறப்பு மாற்றுதிறன் குழந்தைகளின் தனித்திறன்களை வெளிகொணரும் பொருட்டு"எழுச்சி"என்கிற தலைப்பில் மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடப்பு ஆண்டிற்காக நடைபெற்ற "எழுச்சி 2025" நிகழ்ச்சியினை ஈரோடு மாவட்ட துணை அட்சியர் செல்வி கன்ஜன் சௌத்ரி மற்றும் ஈரோடு மாவட்ட மாற்று திறனாளிகள் நல அலுவலர் எஸ். பூபதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.

பின்னர், கல்லூரியின் நரம்பியல் துறைத்தலைவர் மருத்துவர் ஆர்.பி. சித்ராதேவி வரவேற்றார் மற்றும் கல்லூரியின் முதல்வர் மருத்துவர் வி. மணிவண்ணன் ஈரோடு மாவட்டத்திலிருந்து பங்கு பெற்ற 9 சிறப்பு மாற்றுதிறன் பள்ளிகளின் ஆசிரியர்களையும் மற்றும் அப்பள்ளிகளில் பயிலும் 250க்கும் மேற்பட்ட சிறப்பு மாற்றுதிறன் குழந்தைகளை உற்சாகப்படுத்தி, வாழ்த்துரை வழங்கினார்.

இதனை தொடர்ந்து ஓட்டப்பந்தயங்கள், சக்கர நாற்காலி, உடன் ஓடுதல், சாக்கு பை தாவுதல் போன்ற விளையாட்டு போட்டிகளும், தனி மற்றும் குழு நடனங்கள், பாடுதல், ஒப்பனை போன்ற தனித்திறமை காட்டுதலுக்கான பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் சிறப்பு மாற்று திறன் குழந்தைகள் ஆர்வத்துடன் பங்கேற்றது மிகுந்த மகிழ்ச்சியினை ஏற்படுத்தியது.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை சிறப்பு விருந்தினர் கன்ஜன் சௌத்ரி அவர்கள் வழங்கி மாணவர்களை பாராட்டி உரையாற்றுகையில், இது போன்ற விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் குழந்தைகளுக்கு நம்பிக்கையுடன் கூடிய மனவலிமையையும் உற்சாகத்தையும் கொடுக்கும் என்றார். இதுவே ஆரோக்கியமாக இருக்கும் நம் எல்லோருக்கும் ஒரு பெரிய பாடம் என்று எடுத்துரைத்தார். மேலும் இந்த மேடையில் நட்சத்திரங்களாக விளங்கும் நமது திறமைமிக்க குழந்தைகளின் பெற்றோர்களை நன்றி பாராட்டினார்.

நிகழ்வின் முடிவில், கல்லூரியின் நரம்பியல் துறை உதவி பேராசிரியர் மருத்துவர் எம். ஜனணி குழந்தைகளை வாழ்த்தி, நன்றி கூறினார்.

விழாவினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்த முதல்வர் மற்றும் பேராசிரியர்களையும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் மற்றும் செயலர் எஸ். நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ். திருமூர்த்தி, மற்றும் முதன்மை கல்வி அதிகாரி முனைவர் எஸ். ஆறுமுகம் ஆகியோர் பாராட்டினார்கள்.



# சிவகங்கை உலக கழிப்பறை தினத்தை முன்னிட்டு 'மாஸ் கிளீனிங்' நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை நகராட்சி மற்றும் சுலாப் இண்டர்நேஷனல் சமூக சேவை நிறுவனம் இணைந்து உலக கழிப்பறை தினத்தை முன்னிட்டு, 'மாஸ் கிளீனிங்' நிகழ்ச்சி சிவகங்கை அரண்மனை வாசலில் திங்கட்கிழமை காலை 6 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியானது நகர் மன்றத்தலைவர் சி.எம்.துரை ஆனந்த் தலைமையிலும், சிவகங்கை நகராட்சி ஆணையாளர் அசோக்குமார், சிவகங்கை ராணி வேலுநாச்சியார் அரிமா சங்கத் தலைவரும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழு உறுப்பினருமான ஸ்ரீ வித்யா கணபதி ஆகியோரது முன்னிலையிலும் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் திமுக நகர் கழக நிர்வாகிகளான இலக்கிய அணி முத்துக்கண்ணன், சுற்றுசூழல் அணி சுப. ஜெயக்குமார், வழக்கறிஞர் வேலூர் காட்டுராஜா, நகராட்சி அலுவலர்கள், சுகாதார பணியாளர்கள், அரிமாசங்க நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# காரைக்குடி பர்மா காலனி குடியிருப்பு பகுதியில் தனியார் மதுபான கடை திறப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி பொதுமக்கள் முற்றுகையிட வந்ததால் போலீஸ் குவிப்பு பரபரப்பு



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி பர்மா காலனியில் (மனமகிழ் மன்றம் என்ற பெயரில்)தனியார் மதுபான கடை குடியிருப்பு பகுதியில் திறப்பதற்கு அப்பகுதி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து அந்த கடை முன்பு முற்றுகையிட்டு உள்ளதால் அங்கு நூற்றுக்கு மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர் இந்த தனியார் மதுபான கடைக்கு எதிரில் பேருந்து நிறுத்தம் உள்ளதாகவும் அருகிலேயே தனியார் மருத்துவமனையும் 100 மீட்டர் தூரத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ சக்தி வீரமா காளியம்மன், கோவில் உள்ளதாகவும்,போக்குவரத்து மிகுந்த முக்கியமான குடியிருப்பு பகுதியில்இந்த தனியார் மதுபான கடை திறக்க கூடாது என்று கூறி அப்பகுதி பொதுமக்கள் முற்றுகையிட்டு உள்ளதால் அங்கு நூற்றுக்கு மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டனர் இதனால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் புதியதாக கட்டப்பட்டுள்ள தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடத்தை மணிகண்ணன் எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார்

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தமிழகத்தின் மையப்பகுதியில் லட்சம் மதிப்பில் 50 படுக்கை வசதிகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடம் கட்டி தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்தார்அப்பொ-




அமைந்துள்ளதாலும் நீண்ட நெடுஞ்சாலைகள் கொண்ட பகுதி என்பதால் இந்தப் பகுதியில் அடிக்கடி அதிக அளவில் வாகன விபத்துக்கள் நடப்பது வழக்கம் இதில் காயமடைந்தவர்கள் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை சேர்க்கப்பட்டுசிகிச்சைஅளிக்கப்பட்டு வருகிறது இந்த நிலையில் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 23 கோடியே 75 முடிக்கப்பட்டது இந்த கட்டிடத்தை டிசம்பர் இரண்டாவது வாரம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஆய்வு பணிகள் மேற்கொள்ள வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளார்

இதையொட்டி உளுந்தூர்பேட்டைஅரசு மருத்துவமனையில் புதிதாக கட்டப்பட்டுள்ள தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடத்தில் செய்யப்பட்டுள்ள வசதிகள்குறித்துஉளுந்-முழுது அறுவை அரங்கம் தீவிர சிகிச்சை பிரிவு அவசர சிகிச்சை பிரிவு விபத்து சிகிச்சை பிரிவு அறைகளில்செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்து ஆய்வு செய்த அவர் அங்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்து தலைமை மருத்துவ அதிகாரி அன்புமணியிடம் கேட்டறிந்தார். இந்த ஆய்வில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்..

## அச்சிறுப்பாக்கம் அருகே

# அதிமுக பூத் கமிட்டி பாக நிலை நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம், எலப்பாக்கம், அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி ,பகுதியில் பூத் கமிட்டி பாக நிலை நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டத்தை அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் விவேகானந்தன், அச்சரப்பாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் டாக்டர்ரங்கராஜன்,அச்சரப்பாக்கம் பேரூர் கழக செயலாளர் முருகதாஸ், இவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் முன்னிலை வகித்தார் இந்தநிகழ்ச்சியின்சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட பூத் கமிட்டி பொறுப்பாளருமான முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன், பாக நிலை பொறுப்பாளர்கள் பாலமுருகன், பவழன், கல்பனா தேவி இவர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாற்றுக் கட்சியில் இருந்து விலகி பொறுப்பாளர் முன்னிலையில் அதிமுகவில் இணைந்து கொண்டனர் அவர்களுக்கு சால்வை அணிவித்து கட்சியில் இணைத்துக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் எஸ்வந்த் ராவ், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆனூர் பக்தவச்சலம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் கங்கை அமரன், மற்றும் அதிமுக பூத் கமிட்டி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள கொரட்டூர் கிராமத்தில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர் இந்த கிராமத்தில் உள்ள மேல்நிலைநீர்த்தேக்கதொட்டிகளின்மூலம்கிராமஊராட்சியின்சார்பில்பொதுமக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது இந்த நிலையில் கடந்த ஒரு மாத காலமாக சரிவர குடிநீர் வினியோகம் செய்யாமல் ஊராட்சி நிர்வாகம் அலட்சியம் காட்டி வருவதாக கூறப்படுகிறது இது குறித்து கிராம மக்கள் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கு பலமுறை கோரிக்கை மனுக்கள் அனுப்பியும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை இந்த நிலையில் உள்ளாட்சி நிர்வாகத்தின் அலட்சியப் போக்கைகண்டித்து சுமார்50க்கும்மேற்பட்டபெண்கள்இன்றுகாலைதாலிகுடங்களுடன் கொரட்டூர் சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர் சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாக நடைபெற்ற மறியல் போராட்டம் காரணமாக அந்த பகுதியில் திடீர் வரபரப்பு ஏற்பட்டது இது பற்றி தகவல் அறிந்த போலீசார் அங்கு விரைந்து சென்று பொது மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளாட்சி அதிகாரிகளிடம் கூறி புதிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

## மதுராந்தகம் அருகே

# அச்சிறுப்பாக்கம் ஸ்ரீ ஐயப்ப சாமி ஆலய மகா கும்பாபிஷேக விழா



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் ஸ்ரீ ஐயப்ப சுவாமி ஆலயத்தில்

ஐயப்ப சுவாமி பரிவார தெய்வங்கள் பெரிய கருப்பண்ணசாமி, சிறிய கருப்பண்ணசாமி, மாளிகைபுரத்தம்மன், துர்கா தேவி, விநாயகர், முருகன், நவகிரகம், உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து காலை விக்னேஸ்வர பூஜை கணபதி ஹோமம் லட்சுமி ஓமம் நவகிரக பூஜை நடைபெற்று

சிவாச்சாரியார்கள் பதினெட்டாம்

படிவழியாகஏறிகொடி மரம் மற்றும் மூலவர் விமானத்தின் மீதுள்ள கலசத்தின் மீது புனித நீர் தெளிக்கப்பட்டு மகா கும்பாபிஷேக விழா மூத்த அர்ச்சகர் சங்கர் சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு

ஸ்ரீ ஐயப்பா சுவாமி அறக்கட்டளை சார்பில்1000 க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# மதுராந்தகம் நகரில் பூத் கமிட்டி பாக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

### மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்றம் ஆறுமுகம் எம்.எல். ஏ மரகதம் குமரவேல் பங்கேற்பு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகர கழக செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற பூத் கமிட்டி




பாக. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தை மதுராந்தகம் நகரக் கழக செயலாளர் பூக்கடை கே. சி. சரவணன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ் . ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் முன்னிலை வகித்தார் சிறப்புஅழைப்பாளராககலந்துகொண்டசெங்கல்பட்டு கிழக்கு மாவட்ட பூத் கமிட்டி பொறுப்பாளருமான முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன், பாக கிளை பொறுப்பாளர்கள் பாலமுருகன், பவழன், கல்பனா தேவி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன் பேசுகையில் தமிழகத்தில் நாளுக்கு நாள் கொலை கொள்ளை கஞ்சா பாலியல் வன்கொடுமை என சட்ட ஒழுங்கு சீர்கெட்டு உள்ளது எதிர்வரும் 2026சட்டமன்ற தேர்தலில் அதிமுக வெற்றி பெற அனைவரும் ஒன்றுபட்டு பாடுபடுவோம் என உறுதிமொழி ஏற்றனர் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆனூர் பக்தவச்சலம் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 21 ந் தேதி நடைபெறவுள்ளது கலெக்டர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்டத்தில் நவம்பர் - 2025-ஆம் மாதத்திற்கான வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக இரண்டாம்தள கூட்ட அரங்கில் 21.11.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது.அன்றையதினம் காலை 10.00 மணி முதல் 11.30 வரை மனுக்கள் பெறப்படும். 11.30 மணி முதல் 12.30 மணி வரை விவசாய சங்கப் பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான தங்களது பகுதி பிரச்சினைகள் குறித்து கருத்துக்கள் தெரிவிக்கலாம். பிற்பகல் 12.30 முதல் 1.30 முடிய அலுவலர்களின் விளக்கங்களும் தெரிவிக்கப்படவுள்ளது. இக்கூட்டத்தில் விவசாய பெருமக்கள் பயன்பெறு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு , வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி , ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன் , ஆகியோர் நேற்று (17.11.2025) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், ஜெயராமபுரம், வடுகப்பட்டி கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் விடுதலைப் போராட்ட வீரர் பொல்லான் அவர்களுக்கு முழுதிருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ள பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்தஆய்வின்போது ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், மாண்புமிகு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி , ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன் ஆகியோர் நேற்று (17.11.2025) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், ஜெயராமபுரம், வடுகப்பட்டி கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் விடுதலைப் போராட்ட வீரர் பொல்லான் அவர்களுக்கு முழுதிருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ள பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின் போது ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் உட்பட பலர் உள்ளனர்.




தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் நேற்று (17.11.2025) பெருந்துறை, தோப்புப்பாளையம், கொங்கு பொறியியல் கல்லூரி வளாகம், கொங்கு பல்கலை மையத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் நடைபெற்ற 72ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் மாவட்ட அளவில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் (ஈரோடு கிழக்கு) வி.சி.சந்திரகுமார், (அந்தியூர்) ஏ.ஜி.வெங்கடாச்சலம், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே. செல்வராஜ், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.




தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் நேற்று (17.11.2025) பெருந்துறை, தோப்புப்பாளையம், கொங்கு பொறியியல் கல்லூரி வளாகம், கொங்கு பல்கலை மையத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் நடைபெற்ற 72ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் (ஈரோடு கிழக்கு) வி.சி.சந்திரகுமார், (அந்தியூர்) ஏ.ஜி. வெங்கடாச்சலம், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.

# அனைத்து வாக்காளர்களுக்கும் இல்லந்தோறும் சென்று உரிய வழிகாட்டுதலுடன் கணக்கெடுப்பு படிவம் வழங்கப்பட்டுள்ளது.

## ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு–

இந்திய தேர்தல் ஆணையத்தால் 27.10.2025 அன்று வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக அறிவிப்பு வெளியிடப்பட்டு, ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளில் 04.11.2025 முதல், மொத்தமுள்ள 2222 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் அனைத்து வாக்காளர்களுக்கும் இல்லந்தோறும் சென்று உரிய வழிகாட்டுதலுடன் கணக்கெடுப்பு படிவம் வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் வீட்டிற்கு சென்று பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்பு படிவங்களை திரும்ப பெற வருவார்கள். எனவே வாக்காளர்கள் ஏற்கனவே தங்களுக்கு வழங்கப்பட்ட படிவங்களை உரியவாறு பூர்த்திசெய்து திரும்ப வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் சமர்ப்பிக்க ஏதுவாக கணக்கெடுப்பு படிவங்களை தயார் நிலையில் வைத்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரால் நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்களிடமும் வழங்கலாம். மேலும் கணக்கெடுப்பு படிவம் தவிர பிற ஆவணங்கள் கணக்கெடுப்பு காலத்தில் சமர்ப்பிக்க தேவையில்லை. இந்தப் பணிக்காக 8 வாக்காளர் பதிவு அலுவலர்கள், 44 உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள், 226 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் மேற்பார்வை அலுவலர்கள் மற்றும் 452 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் கூடுதல் மேற்பார்வை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பாக 6820 வாக்குச்சாவடி நிலை முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், 475 பிற துறை சார்ந்த அலுவலர்கள் இந்தப் பணிக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் வாக்காளர்கள் தங்களது பெயர்களை 2002–ம் ஆண்டின் வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா என்பதை இந்திய தேர்தல் ஆணையத்தின் voters.eci.gov.in என்ற முகவரியில் தேடிப் பார்த்து எடுத்துக்கொள்ளலாம். மேலும், 2002–ம் ஆண்டின் வாக்காளர் பட்டியலை PDF வடிவில் ஒரு வாக்குச்சாவடியின் முழு வாக்காளர் பட்டியலையும் பதிவிறக்கம் (Download) செய்து தங்களது பெயர் உள்ளதா என்பதை சரிபார்த்து வாக்காளர் கணக்கீட்டுப் படிவங்களை பூர்த்தி செய்து கொள்ளலாம். மேலும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் உள்ள BLO App வாயிலாகவும் தெரிந்து கொள்ளலாம். மேலும், புகார் மற்றும் சந்தேகங்களை 1950 (Help Desk) என்ற இலவச எண்ணில் தொடர்பு கொண்டும், 9042580535 என்ற எண்ணிற்கு WhatsApp மூலம் புகார் தெரிவிக்கலாம் என ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# ஈரோடு மாவட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்



ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (17.11.2025) மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, கலைஞரின் கனவு இல்லம், இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 252 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார். மேலும், முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) முகமது குதுரத்துல்லா உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



The Action Zone பாக்ஸிங் அகாடமி மாணவி ச.குஸ்மிதா, முதலமைச்சர் கோப்பைக்கான பாக்ஸிங் போட்டியில் கலந்து கொண்டு மாநில அளவிலான போட்டிக்கு தேர்வாகி சென்னையில் நடைபெற்ற இறுதி சுற்றில் வெண்கல பதக்கம் பெற்றுள்ளார். ஈரோடு மாவட்டத்தில் இருந்து, பாக்ஸிங் பிரிவில் முதலமைச்சர் கோப்பை இறுதி சுற்றில் பதக்கம் பெற்றவர் இவர் ஒருவரே என்பது குறிப்பிடத்தக்கது. மாணவி குஸ்மிதா அமைச்சர் முத்துச்சாமி அவர்களிடம் வாழ்த்துக்கள் பெற்றபோது, The Action Zone பாக்ஸிங் அகாடமியின் பயிற்சியாளர்கள் மஹேந்திரகுமார் மற்றும் மோகன்ராஜ் ஆகியோர் உடனிருந்தார்.

# 18 Members Of Hyderabad Family 3 Generations Killed In Saudi Bus Crash



*Hyderabad:*

*Eighteen members of one family, nine of them children, are among the 42 Indian pilgrims killed in a road accident near Medina in Saudi Arabia. The Hyderabad-based family was to return on Saturday, their relatives told NDTV.*

*"My sister-in-law, brother-in-law, their son, three daughters and their children went (for Umrah). They left eight days ago. The Umrah was done, and they were returning to Medina. Around 1.30 am, the accident occurred, and the bus was destroyed in the fire. They were supposed to return on Saturday," Mohammed Asif said.*

*Asif said they were in constant touch with their relatives before the tragedy struck. "Eighteen members of one family -- nine adults and nine children -- have died. It is a terrible tragedy for us," he said.*

*Asif identified some of his relatives as Naseeruddin (70), his wife Akhter Begum (62), son Salauddin (42), daughters Amina (44), Rizwana (38), and Shabana (40), and their children.*

*At the Ramnagar home of Naseeruddin and his family, someone brought in the keys from a neighbour, and it was loud wails as his sister entered the home that was her brother's home till now. "My brother's entire family has been wiped out," she cried out.*

*Most of the 42 people killed in the road crash were from Hyderabad. The bus they were travelling in collided with a diesel tanker about 30 km from Medina, according to reports. The accident occurred late at night when most passengers were sleeping. So they could not escape in time as the vehicle caught fire after the crash.*

*Prime Minister Narendra Modi has said he was "deeply saddened" by the incident. "My thoughts are with the families who have lost their loved ones. I pray for the swift recovery of all those injured. Our Embassy in Riyadh and Consulate in Jeddah are providing all possible assistance. Our officials are also in close contact with Saudi Arabian authorities," he said in a post on X.*

*The Indian consulate has set up a control room and a helpline after the incident. "In view of a tragic bus accident near Medina, Saudi Arabia, involving Indian Umrah pilgrims, a 24x7 Control Room has been set up in Consulate General of India, Jeddah. The contact details of the Helpline are as under: Toll free number - 8002440003," the consulate said in a post on X.*

*Telangana Chief Minister Revanth Reddy has expressed sorrow over the incident and asked top state officials to stay in touch with the Indian consulate and provide necessary support. "The government will stand by the affected families. I pray that they remain strong," he said.*

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.